# சிங்கம் உலவிய சேலத்து மண்ணில், இளைஞர் அணியின் ஈடிணையில்லா எழுச்சி மாநாடு!

## தமிழ் - ஆங்கில நாளேடுகளின் தகுதி மிக்க செய்தித் தலைப்புகள் இதோ காண்க!

### தினகரன்

தெற்கில் விடியல் பிறந்திருப்பதைப் போல, விரைவில் நாடு முழுவதும் விடியல் பிறக்கும்.

5 லட்சத்துக்கும் அதிகமானோர் குவிந்தனர்.

தி.மு.க. இளைஞர் அணி மாநாடு: குலுங்கியது சேலம்!

### THE HINDU

T.N. People will not vote for Narendra Modi in 2024 Lok Sabha election too.

### தினமணி

40 தொகுதிகளிலும் ‘ இந்தியா’ கூட்டணி வெற்றி பெறும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

### இந்து தமிழ் திசை

அமையவிருக்கும் ‘இண்டியா’ கூட்டணி ஆட்சி; மாநிலங்களுக்கு உரிமைகள் வழங்கும் சட்டத்தை உருவாக்கும்.

### தினத்தந்தி

கவர்னர் பதவியை நிரந்தரமாக அகற்ற வேண்டும்.

ஹிட்லர்களின் தோல்வி ஸ்டாலினிடம்தான்!

உங்களை என் மகனாக, கொள்கை வாரிசாகப் பார்க்கிறேன்; நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வெல்ல சூளுரைப்போம்!

இந்தியாவில் இதுவரை நடைபெறவில்லை; 5 லட்சம் பேர் கலந்து கொண்ட இளைஞரணி எழுச்சி மாநாடு!

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

### THE TIMES OF INDIA

Stalin unleashes critique on BJP's relief failure, Tamil identity threats.

### தீக்கதிர்

இந்துக்களின் உண்மையான எதிரியான பா.ஜ.க.வை அம்பலப்படுத்துவோம்.

### தினமலர்

இந்தியாவில் ஒருகட்சி ஆட்சி இனி இருக்காது.

### DECCAN Chronicle

Amend Constitution, Give autonomy to states.

### THE NEW INDIAN EXPRESS

Centre's full - time job is to whittle away states's rights ; fighting for BJP - ruled states too.

---

செயற்கை நுண்ணறிவு மூலம்

## கலைஞர் வாழ்த்திய வீடியோ வைரல்!

சேலம், ஜன. 23 -

சேலத்தில் நடந்த இளைஞரணி மாநாட்டில், 1,500 டிரோன் ஷோ உள்பட பல்வேறு நவீன தொழில் நுட்ப நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்தது. இதற்கிடையே, மாநாட்டிற்கு மறைந்த தி.மு.க. தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செயற்கை நுண்ணறிவு வசதியின் மூலம் வாழ்த்து சொல்வது போல், சமூக வலைதளங்களில் வீடியோ காட்சி வைரலானது.



அதில், திராவிட முன்னேற்ற கழகத்தின் இளைஞரணி 2வது மாநில மாநாடு நடைபெறுகிறது. கடந்த 10 ஆண்டுகால பா.ஜ. ஆட்சியில், மாநில உரிமைகள் பறி போய்விட்டது. கல்வி உரிமைகள், மொழி உரிமை, நீதி உரிமை, சட்ட உரிமை, மாநிலங்களின் உரிமையை ஒன்றிய அரசு அபகரிப்பு செய்கிறது. ஜனநாயக நெறிமுறைகளை கொண்ட, ஜனநாயக பாசறையான தி.மு.க. அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய கட்சி அல்ல.

நெல்லையில் 2007ம் ஆண்டு தி.மு.க. இளைஞரணி மாநாடு, தம்பி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. வெள்ளிவிழா மாநாடாக சிறப்பாக நடந்தது. அதில் அடுத்த தலைமுறையினரை கழகத்தில் சேர்க்க ஈர்த்தது. 1970ம் ஆண்டு தி.மு.க. மாநில மாநாடு திருச்சியில் நடத்தினேன். அதில் 5 முழக்கங்களை அறிமுகப்படுத்தினேன். அதில், 5வது முழக்கம் தான் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதாகும். தற்போது 2024ம் ஆண்டு தேர்தலை எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில், கழக வீரர்களை தயார்படுத்தும் பயிற்சி பாசறையாக இந்த மாநாடு அமையும்.

தம்பி உதயநிதி தலைமையில், மாங்கனி மாவட்டமாம் சேலத்தில், 2வது மாநில மாநாடு நடக்கிறது. இது ஜனநாயகத்தையும், மாநில உரிமையையும் மீட்டெடுக்க உழைத்திடும். ஓயாமல் உழைத்திடும் நம்மை காக்க, மாநிலத்தை காக்க உழைக்கும் கண்மணிகள், நாட்டை காத்திட அழைக்கிறேன். நாற்பதும் நமதே, நாடும் நமதே. பெரியாரின் பேரனாய், அண்ணாவின் தம்பிக்கு தம்பியாய், எனது உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளாய் சேலத்திற்கு அழைக்கிறேன். சமத்துவம், சமுதாயம் காக்க மாநிலத்தின் நியாயமான உரிமைகளை மீட்கும் குரலை உயர்த்துவோம். மாநில உரிமைகளை மீட்டெடுப்போம். இருவண்ண கொடியை உயர்த்தி பிடிப்போம்.

இவ்வாறு வீடியோவில் இருந்தது.

---

முத்தமிழறிஞர் கலைஞரின் உரை:

## அசத்திய சிறுமிக்கு நினைவுப் பரிசு வழங்கிய உதயநிதி ஸ்டாலின்!

*சேலம், ஜன. 23 -*

*சேலத்தில் நடைபெற்ற இளைஞரணி மாநில மாநாட்டில் யோகேஸ்வரி என்ற சிறுமிக்கு பேச வாய்ப்பு வழங்கப்பட்டது. செந்தமிழில் அவர் இளைஞரணியை வரவேற்று கவிதை வாசித்ததும், தொடர்ந்து, கலைஞரின் உரை முழக்கத்தை அச்சு பிசகாமல், பேசியதும் மாநாட்டில் பலத்த கரவொலியை எழுப்பியது. அப்போது மேடையில் இருந்த இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் எழுந்து நின்று சிறுமியை மனதார பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இதேபோல், அமைச்சர்களும் பாராட்டினர். தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் சிறுமிக்கு நினைவுப் பரிசை வழங்கி சிறப்பித்தார்.*




---

சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் இன்று நடைபெறுகிறது!

ஆர்க்காடு நா.வீராசாமி - அமைச்சர் துரைமுருகன் முன்னிலை! கழகப் பொருளாளர்

## டி.ஆர்.பாலு எம்.பி. எழுதிய நூல்கள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

கி.வீரமணி - ப.சிதம்பரம் எம்.பி. - 'இந்து' என்.ராம் - கவிப்பேரரசு வைரமுத்து - அமைச்சர் கே.என்.நேரு - கனிமொழி கருணாநிதி எம்.பி., - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, ஜன. 23-

கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் எழுதிய 'உரிமைக்குரல்', 'T.R.BAALU, THE MAN & MESSAGE', 'MY VOICE FOR THE VOICELESS', பாதை மாறா பயணம் ஆகிய நூல்கள் வெளியீட்டு விழா இன்று (23.1.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று, நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் முன்னாள் அமைச்சர் ஆர்க்காடு நா.வீராசாமி, கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நூல்கள் வெளியீட்டு விழாவில், 'உரிமைக் குரல்' எனும் நூலின் முதல் பிரதியை, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களும்,

'T.R. BAALU, THE MAN & MESSAGE' எனும் நூலின் முதல் பிரதியை, ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. அவர்களும்,

'MY VOICE FOR THE VOICELESS' எனும் நூலின் முதல் பிரதியை, 'தி இந்து' குழும தலைவர் 'இந்து' என்.ராம் அவர்களும்,

'பாதை மாறா பயணம்' எனும் நூலின் முதல் பிரதியை, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

நூல்கள் வெளியீட்டு விழாவில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்தி உரையாற்றுகின்றனர்.

விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வரவேற்புரையாற்றுகிறார்.

விழாவில், கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஏற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் தொகுப்புரையாற்றுகிறார்.

நியூ செஞ்சுரி புக் அவுஸ் தலைமை நிர்வாகி க.சந்தானம் நன்றி கூறுகிறார்.

---

## மாநாட்டுக்கு உலக சாதனை அங்கீகாரம்!

**சே**லத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இளைஞரணி மாநில மாநாட்டை 9 லட்சம் சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்ட பந்தலை வடிவமைத்து நடத்தியதை 'யுனிக் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ்' அமைப்பு உலக சாதனையாக அங்கீகரித்து சான்றிதழ் வழங்கியுள்ளது. இதற்கான சான்றிதழ் முதல்வரிடம் வழங்கப்பட்டது. மாநாட்டு பந்தல் ஏற்பாட்டாளர் பந்தல் சிவா உள்ளிட்டோர் கௌரவிக்கப்பட்டனர்.